# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2026.06.05 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# இலங்கை ஊடக உயர்தொழிலர்களின் பட்டயம்பெற்ற நிறுவகம்

**ஊடக உயர்தொழிலர்களுக்கான உயர்தொழில்சார் நியமங்களை அறிமுகப்படுத்துவதற்கும் பேணுவதற்குமான நோக்குடன் இலங்கை ஊடக உயர்தொழிலர்களின் பட்டயம்பெற்ற நிறுவகத்தைத் தாபிப்பதற்காகவும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டமூலம்**

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 87.00** **தபாற் செலவு : ரூபா 150.00**



இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

# இலங்கை ஊடக உயர்தொழிலர்களின் பட்டயம் பெற்ற நிறுவகம்

ச.வ. - ஓ 25/2025

ஊடக உயர்தொழிலர்களுக்கான உயர்தொழில்சார் நியமங்களை அறிமுகப்படுத்துவதற்கும் பேணுவதற்குமான நோக்குடன் இலங்கை ஊடக உயர்தொழிலர்களின் பட்டயம்பெற்ற நிறுவகத்தைத் தாபிப்பதற்காகவும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**1.** (1) இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, இலங்கை ஊடக உயர்தொழிலர்களின் பட்டயம்பெற்ற நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள் (இச்சட்டத்தில் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறானதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள், சட்டமூலமானது எத்தேதியன்று பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பாகம் I

## இலங்கை ஊடக உயர்தொழிலர்களின் பட்டயம்பெற்ற நிறுவகத்தைத் தாபித்தல்

இலங்கை ஊடக உயர்தொழிலர்களின் பட்டயம்பெற்ற நிறுவகத்தைத் தாபித்தல்

**2.** (1) (இச்சட்டத்தில் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை ஊடக உயர்தொழிலர்களின் பட்டயம்பெற்ற நிறுவகம்" எனவழைக்கப்பட்டு அறியப்படுவதுமான நிறுவகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிறுவகமானது, (1) ஆம் உட்பிரிவின்மூலம் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன் இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையும் கொண்டதாக விருத்தலும் வேண்டும்; அத்துடன் அது அப்பெயரில் வழக்குத்தொடுக்கலாமென்பதுடன் மற்றும் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

PL 15758- 470 (2026/05)

நிறுவகத்தின் குறிக்கோள்கள்

**3.** நிறுவகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் -

(அ) ஊடகத்துறையில் ஊடக உயர்தொழிலர்களுக் காக ஓர் உயர்தொழில் ஒழுங்கமைப்பாகப் பணியாற்றுதல்;

(ஆ) நிறுவகத்தின் உறுப்பினர்களாக வருவதற்குத் தேவைப்பட்ட தகைமைகளைப் பெற்றுக் கொண்டுள்ள ஊடக உயர்தொழிலர்களை நிரலிற் சேர்த்தல்;

(இ) ஊடகம் என்னும் விடயத்தில் நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கும் மாணவர்களுக்கும் அறிவு புகட்டுதலும் பயிற்றுவித்தலும்;

(ஈ) நிறுவகத்தின் உறுப்பினர்கள் மற்றும் மாணவர் களின் அத்துடன் ஊடக உயர்தொழிலர்களின் தேர்ச்சி நியமங்களையும் செயல்முறைப் பயிற்சிச் செயற்பாடுகளையும் அதிகரித்தல்;

(உ) ஒரு நடத்தைக்கோவைக்கிணங்க நிறுவகத்தின் உறுப்பினர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே உயர்தொழில்சார் ஒழுக்காற்றைப் பேணுதல்;

(ஊ) புதிய உலகளாவிய தொடர்பாடலையும் ஊடகப் போக்குகளையும் அபிவிருத்திசெய்து வசதிப் படுத்துவதற்கென ஊடகத்துறையில் ஆராய்ச்சி நடாத்துதல்;

(எ) ஊடகம் என்னும் துறையில் கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளை நடாத்துதலும் நாளேடுகளையும், சஞ்சிகை களையும் வெளியிடுதலும்;

(ஏ) இலங்கையில் சிறந்த உயர்தொழில்சார் ஊடகக் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்கென இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஊடகத்துறையில் உள்ள நிறுவகங்களின் ஒத்துழைப்புடன் ஊடகம் தொடர்பான கல்விசார், பயிற்சி மற்றும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டங்களைப் பரிமாற்றுதல்;

(ஐ) ஊடக உயர்தொழிலர்களின் வினைத்திறனை மதிப்பீடுசெய்வதில் ஊடக உயர்தொழில் மயமாக்குதலில் அவர்களுக்குத் தராதர அங்கீகாரமளித்தல்; அத்துடன்

(ஒ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதன் இடைநேர்விளைவானவாறான அல்லது உகந்த வாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

நிறுவகத்தின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, நிறுவகம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டதாதல் வேண்டும்:-

(அ) இலங்கையில் ஊடக அறிவையும் ஊடக உயர் தொழில்மயமாக்குதலையும் உயர்த்துதலை இலக்காகக்கொண்ட ஏதேனும் திட்டம், நிகழ்ச்சித் திட்டம் அல்லது செயற்பாடுபற்றி அமைச்சருக்கு மதியுரையளித்தல்;

(ஆ) நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட கற்கைநெறி களைத் தீர்மானித்தல்;

(இ) மாணவர்களின் பதிவையும் நிரலிற் சேர்த்தலையும் ஒழுங்குபடுத்துதலும் மேற்பார்வை செய்தலும் மற்றும் அத்தகைய மாணவர்களின் மீது மற்றும் அதன் இடைநேர்விளைவான கருமங்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும்;

(ஈ) செயல்முறைப் பயிற்சிநெறித்திட்டத்தைத் தீர்மானித்தலும் அங்கீகரித்தலும் மற்றும் அத்தகைய கற்கை நெறிகளை நடாத்துதலும்;

(உ) நிறுவகத்தின் உறுப்பாண்மைக்காகத் தகைமை யளிக்கும் பரீட்சைகளை நடாத்துதல்;

(ஊ) நிறுவகத்தின் உறுப்பினர்கள், ஊடக உயர் தொழிலர்கள், நிறுவகத்தின் மாணவர்கள் மற்றும் ஊடகத்தில் அக்கறைகொண்டுள்ளோரின் பாவனைக்காக நூலகங்களைப் பேணுதல்;

(எ) நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட கற்கை நிகழ்ச்சித்திட்டங்களில் திறமைவாய்ந்தோருக்குப்

புலமைப்பரிசில்கள், அளிப்புக்கள் மற்றும் பரிசில்களை வழங்குதல்;

(ஏ) நிறுவகத்தின் அலுவலர்களையும் ஊழியர் களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும், நிறுவகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக அவர்களுக்கு ஊதியமளித்தலும் மற்றும் நிறுவகத்தின் அலுவலர்கள் அத்துடன் ஊழியர்கள்மீது ஒழுக் காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும்;

(ஐ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு நிறுவகத்தின் உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்களைப் பயிற்றுவித்தல்;

(ஒ) நிறுவகத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் கூட்டங்கள், விரிவுரைகள், செயல மர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளை ஒழுங்குபடுத்துதல்;

(ஓ) நிறுவகத்துக்குத் தேவைப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்தல், 5 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பேரவையின் பொதுக் கூட்டமொன்றில் அத்தகைய பேரவையினால் கருதப்படக்கூடியவாறாக நிறுவகத்துக்குரிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல் அல்லது விற்பனை செய்தல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல்;

(ஔ) ஏதேனும் அரச வங்கியில் நடப்பு, சேமிப்பு அல்லது வேறு வைப்புக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணுதல் அவசியமாயின் அத்தகைய கணக்குகளை மூடுதல்;

(க) நிறுவகத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத நிறுவகத்தின் நிதிகளை நிறுவகத்தின் ஏதேனும் வங்கிக் கணக்கில் அல்லது எவையேனும் கணக்குகளில் வைப்பிலிடுதல்;

(ங) நிறுவகத்தின் பாவனைக்காக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள மூலங்களிலிருந்து கொடைகள், மானியக் கொடைகள், கடன்கள், நன்கொடைகள் மற்றும் அசைவுள்ள மற்றும் அசைவற்ற இறுதிவிருப் பாவணக்கொடைகளை ஏற்றுக்கொள்ளுதலும் பெறுதலும்:

ஆயின், நிறுவகமானது, நிறுவகத்துக்கு செய்யப்பட்ட எல்லா வெளிநாட்டு கொடைகள் மானியக்கொடைகள், நன்கொடைகள் அல்லது இறுதிவிருப்பாவணக் கொடைகள் தொடர்பிலும், நிதியமைச்சின் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(ச) ஊடகத்துறையில் உயர்தொழில்சார் நியமங்களை அறிமுகப்படுத்துவதற்கும், அபிவிருத்தி செய்வ தற்கும், பேணுவதற்கும், கண்காணிப்பதற்கும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்;

(ஞ) இலங்கையில் ஊடகம் தொடர்பான ஒரு வள நிலையத்தைத் தாபித்தலும் பேணுதலும்;

(ட) இலங்கையில் ஊடக உயர்தொழிலின் முன்னேற்றம் மீது ஆராய்ச்சியை நிறை வேற்றுவதற்கு உறுப்பினர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் அல்லது ஊடகத்தில் அக்கறை கொண்டுள்ள வேறு ஆட்களுக்கு உதவுதல்;

(ண) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணத்தைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல்;

(த) நிறுவகத்தின் குறிக்கோள்களையொத்த குறிக் கோள்களைக்கொண்ட வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைதலும்;

(ந) நிறுவகத்தின் உறுப்பினர்கள் பற்றிய இடாப் பொன்றைப் பேணுதலும் வெளியிடுதலும்;

(ப) நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அல்லது நிறுவகத்தின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கு அவசியமென நிறுவகம் கருதக்கூடியவாறான குழுக்கள், சபைகள் அல்லது உபகுழுக்களைத் தீர்மானித்தலும் தாபித்தலும்;

(ம) அதன் ஊழியர்களுக்கான சேமநல மற்றும் பொழுதுபோக்கு வசதிகளைத் தாபித்தலும் பேணுதலும்;

(ய) உறுப்பினர்களிடையே உயர்தொழில்சார் ஒழுக்காற்றைப் பேணுவதற்கென நடத்தைக் கோவையொன்றைத் தயாரித்தல்; அத்துடன்

(ர) நிறுவகத்தின் குறிக்கோள்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு நிறுவகத்தின் அபிப்பிராயத்தில் அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்தல்.

பாகம் II

## நிறுவகத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் நிருவகித்தலும்

நிறுவகத்தின் பேரவையும் இடைக்காலப் பேரவையும்

**5.** (1) நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகமும் முகாமையும் (இச்சட்டத்தில் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவகத்தின் ஆளும் பேரவையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஊடகத்துறையில் தகைமைகள், அறிவு மற்றும் அனுபவமுடைய நிறுவகத்தின் உறுப்பினர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டு உறுப்பினர்கள்; அத்துடன்

(ஆ) ஊடகத்துறையில் தகைமைகள், அறிவு மற்றும் அனுபவமுடைய நிறுவகத்தின் உறுப்பினர்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட ஏழு உறுப்பினர்கள்.

(2) நிறுவகத்தின் தவிசாளரும் ஏனைய பதவிதாங்குநர்களும் 26 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்கப் பேரவை உறுப்பினர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) பேரவையானது, நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட, குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன்மீது விதிக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(4) (அ) அமைச்சர், 26 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்கப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வரை அல்லது நியமிக்கப்படும்வரை (இதனகத்துப் பின்னர் "இடைக்காலப் பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இடைக் காலப் பேரவையொன்றை நியமித்தல் வேண்டும்; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அத்துடன்

(ii) ஊடகத்துறையில் எண்பிக்கப் பட்ட அறிவு, கீர்த்தியுடன் திறமை காட்டியுள்ளவர்களும், மற்றும் ஆகக்குறைந்தது இருபதாண்டு அனுபவமுடையவர்களும், அமைச் சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர் களுமான வேறு ஆறு ஆட்கள்.

(ஆ) இடைக்காலப் பேரவை பின்வருவனவற்றுக்கான விதிகளையாக்குவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்:-

(i) நிறுவகத்துக்குத் தெரிவுசெய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய

உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான கட்டளைக்கற்கள் என்பன தொடர்பில்; அத்துடன்

(ii) உட்பிரிவுகள் (1) மற்றும் (2) இலுள்ள ஏற்பாடுகளின் நியதிகளின்படி பேரவையுறுப்பினர்களையும் பதவிதாங்குநர்களையும் தேர்ந்தெடுப்பதற்கும் நியமிப்பதற்கும்.

(இ) இடைக்காலப் பேரவையானது, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியினுள் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பேரவையுறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

**பேரவையுறுப்பினர்களின் பதவிக்காலம்**

6. (1) பேரவையுறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பின் மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது தேர்ந்தெடுத்தல் அல்லது நியமனத்தேதியிலிருந்து இரண்டாண்டுக்காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(2) பேரவையின் எவரேனும் உறுப்பினர் ஒன்றுக்கு மேற்படாத பதவிக்காலத்துக்கு பேரவையின் தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது.

(3) உறுப்பினரொருவரின் இறப்பு, பதவிவிலகுதல், பதவியிலிருந்து அகற்றப்படுதல் அல்லது வேறு ஏதேனும் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், பேரவையானது, 26 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்ட உறுப்பாண்மைக்கான தகைமைகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(4) உட்பிரிவு (3) இன் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆளொருவர், அத்தகைய உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(5) பேரவையின் எவரேனும் உறுப்பினர், எந்நேரத்திலும் அப்பொருள்பட தவிசாளருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை தவிசாளரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(6) பேரவையின் எவரேனும் உறுப்பினர், தவிசாளரிட மிருந்து முன்னனுமதி பெற்றுக்கொள்ளாமல் பேரவை யின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு சமுகமளிக் காதிருக்குமிடத்து, அத்தகைய உறுப்பினர், அத்தகைய மூன்றாவது கூட்டத்தேதியிலிருந்து பயனுறுவதாகப் பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் 26 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட பேரவையின் விதிகளுக் கிணங்க அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராள் நியமிக்கப்படலாம்.

பேரவையின் கூட்டங்கள்

**7.** (1) தவிசாளர் பேரவையின் எல்லாக் கூட்டங்களையும் கூட்டுதல் வேண்டும்.

(2) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப் பெண், தவிசாளருட்பட ஐந்து உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்.

(3) பேரவையின் கூட்டங்கள் ஒன்றில்:-

(அ) கூட்டநடப்பெண்ணாக அமைகின்ற எண்ணிக்கை யினரான உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் கூடியிருப்பதன்மூலம் நடாத்தப்படலாம்; அல்லது

(ஆ) கட்புல - செவிப்புலத் தொடர்பாடல் மூலம் நடாத்தப்படலாம் இதன் மூலம் பங்கு பற்றுகின்ற மற்றும் கூட்டநடப்பெண் ஒன்றாக அமைகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் அத்தகையவொரு கூட்டம் நடைபெறும் போது பங்குபற்றுகின்ற ஒவ்வொரு உறுப்பினரையும் ஒரே நேரத்தில் காண முடியும் மற்றும் கேட்க முடியும்.

(4) பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்காகவுள்ள எல்லாக் கேள்விகளும், அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையினரின்

வாக்கினால் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர், அவரது வாக்குடன் சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) (அ) தவிசாளர், பேரவையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமைதாங்குதல் வேண்டும்.

(ஆ) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் சமுகமளிக்காதபோது துணைத்தவிசாளர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(இ) தவிசாளர் மற்றும் துணைத்தவிசாளர் ஆகிய இருவரும் ஏதேனும் கூட்டத்துக்கு சமுகமளிக்காதபோது, சமுகமளித்துள்ள உறுப்பினர்கள், அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கு உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(6) நிறுவகத்தின் கூட்டங்கள், 26 ஆம் பிரிவின்கீழ் காலத்துக்குக்காலம் பேரவையினால் ஆக்கப்படும் விதிகளுக்கு இணங்க நடாத்தப்படுதல் வேண்டும்.

பேரவையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள், ஏதேனும் வெற்றிடம் காரணமாகச் செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதலாகாது

**8.** பேரவையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் நிலவுவதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு நிலவுவதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகவிருத்தலோ அல்லது கருதப்படுதலோ ஆகாது.

நிறுவகத்தின் இலச்சினை

**9.** (1) நிறுவகத்தின் இலச்சினையானது –

(அ) பேரவையினால் காலத்துக்குக்காலம் முடிபு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்;

(ஆ) பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(இ) பேரவையின் வலுவளிப்புடனும் பேரவையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமூகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) பேரவையானது, நிறுவகத்தின் இலச்சினை பொறிக்கப்படும் சாதனங்கள் மற்றும் ஆவணங்களின் இடாப்பொன்றை பேணுதல் வேண்டும்.

பேரவையானது நிபுணர்களைக் கூட்டங்களுக்கு வரவழைத்தல்

**10.** (1) பேரவையானது, பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் உறுப்பினர்களினால் கையாளப்பட்ட ஏதேனும் கருமத்தின்மீது நிபுணத்துவக் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன், அத்தகைய ஏதேனும் கருமத்தில் நிபுணத்துவத்தையுடைய எவரேனும் நிபுணரை அத்தகைய கூட்டத்திற்கு வரவழைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கு வரவழைக்கப்பட்ட நிபுணர்கள் வாக்களிக்கும் உரிமைகளைக் கொண்டிருத்தலாகாதென்பதுடன் பேரவையானது அத்தகைய நிபுணர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதற்கான அல்லது நிராகரிப்பதற்கான முழுத் தற்றுணிபைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

பேரவையின் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கான ஊதியம்

**11.** பேரவை உறுப்பினர்களுக்கும் நிபுணர்களுக்கும் காலத்துக்குக்காலம் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறாகப் பேரவையின் கூட்டங்களுக்கு வருகைதருவதற்காக 16 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நிறுவகத்தின் நிதியத் திலிருந்து அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

குழுக்களை நியமித்தல்

**12.** (1) பேரவையானது, இச்சட்டத்தின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காகப் பின்வருவனவற்றை நியமிக்கலாம் -

(அ) நிறுவகத்தின் உறுப்பினர்களினதும் மாணவர் களினதும் கல்வி தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ்க் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருமத்துக்குப் பயன்கொடுக்கக்கூடிய கல்விசார் குழுவொன்று;

(ஆ) நிறுவகத்தின் நிருவாகம் மற்றும் நிதி தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருமத்துக்குப் பயன்கொடுக்கக்கூடிய நிதி மற்றும் நிருவாகக் குழுவொன்று; அத்துடன்

(இ) நிறுவகத்தின் உறுப்பினரொருவர் தொடர்பான ஏதேனும் ஒழுக்காற்றுக் கருமம் தொடர்பில் 23 ஆம் பிரிவின் நியதிகளின்படி விசாரணைகளை நடாத்தக்கூடிய ஒழுக்காற்றுக் குழுவொன்று.

(2) அத்தகைய குழுக்களின் அரசியலமைப்பு, அத்தகைய குழுக்களின் உறுப்பினர்களினது தத்துவங்களும் பணிகளும் மற்றும் அது தொடர்பான வேறு ஏதேனும் கருமம் 26 ஆம் பிரிவின்கீழ் பேரவையினால் ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஏதேனும் குழுவுக்கான செயலாளராகப் பணிப்பாளர் தலைமையதிபதி சேவையாற்றுதல் வேண்டும்.

நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி

**13.** (1) பேரவையானது பணிப்பாளர் தலைமையதிபதி யொருவரை நியமித்தல் வேண்டும்; (இச்சட்டத்தில் பணிப்பாளர் தலைமையதிபதி எனக் குறிப்பீடு செய்யப்படும்) அவர் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்றலுவலராகவும் பிரதான கணக்கீட்டலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(2)பணிப்பாளர்தலைமையதிபதி,பேரவையின் எழுத்திலான அங்கீகாரத்துடன், இச்சட்டத்தினால் அவருக்களிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை நிறுவகத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்குக் கையளித்தல் அவசியமென அவர் கருதும்போதெல்லாம் அவ்வாறு செய்யலாமென்பதுடன் அத்தகைய அலுவலர் அல்லது ஊழியர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, 14 ஆம் பிரிவின்கீழ் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட அவரது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும்,

புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் பேரவைக்குப் பொறுப் பாகவிருத்தலும் வகைசொல்லவேண்டியவராகவும் இருத்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, போதெல்லாம், பேரவை, அத்தகைய சமுமின்மையின் போது அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு நிறுவகத்தின் வேறோர் அலுவலரை நியமிக்கலாம்.

பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்

**14.** இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, பணிப்பாளர் தலைமையதிபதி –

(அ) பேரவையின் எல்லா முடிபுகளினதும் நிறை வேற்றுகைக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்;

(ஆ) பேரவையின் பொதுவான மற்றும் விசேடமான பணிப்புகளுக்கும், கட்டுப்பாட்டுக்கும் அமைய, பணியாட்டொகுதியினரின் நிருவாகம் மற்றும் கட்டுப்பாடு உட்பட நிறுவகத்தின் அலுவல் களினது நிருவாகத்துக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்;

(இ) பேரவையினால் அவருக்குக் குறித்தளிக்கப்படக் கூடியவாறான எல்லாப் பணிகளையும் நிறைவேற்றுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) பேரவைக்கான மற்றும் 12 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட குழுக்களுக்கான செயலாளராகப் பணியாற்றுதல் வேண்டும்.

நிறுவகத்தின் பணியாட் டொகுதியினரும் ஊதியமும்

**15.** (1) நிறுவகமானது, தொழில்நுட்ப மற்றும் தேர்ச்சி பெற்ற ஆளணியினர், நிருவாக மற்றும் முகாமைசார் ஆளணியினர் அத்துடன் தோதானவர்களென அது கருதக்கூடியவாறான அத்தகைய வேறு ஆட்கள் உட்பட, நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் வினைத்திறனான பிரயோகம், நிறைவேற்றுகை என்பவற்றுக்கும் தேவைப்படுகின்றவாறாக அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களையும் ஊழியர்களையும் ஊழியத்துக்கமர்த்துதல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் பணியாட்டொகுதியினருக்கும், பேரவையினால் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் III

## நிறுவகத்தின் நிதியம்

**16.** (1) நிறுவகமானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். நிறுவகத்தின் நிதியம்

(2) பின்வருவன நிறுவகத்தின் நிதியத்தினுட் செலுத்தப் படுதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகம், அதன் தத்து வங்களையும், கடமைகளையும், பணி களையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் நிறுவகத்தினால் பெறப் படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத் தொகை களும்; அத்துடன்

(ஆ) 4 ஆம் பிரிவின் (ங) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கையினுள்ளோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ உள்ள ஏதேனும் மூலத்தி லிருந்து கொடைகள், மானியக் கொடைகள், நன்கொடைகள் மற்றும் இறுதிவிருப்பாவணக் கொடைகள் என்ற வகையாக நிறுவனத்தினால் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்.

(3) இச்சட்டத்தின்கீழ் பேரவை அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப் படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**17.** (1) நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்

(2) நிறுவகத்தின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் நிறுவனத்தின் வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப்புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) நிறுவகத்தின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்டவொரு தகைமை பெற்ற கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரினால் நியமிக்கப்பட்ட அத்தகைய தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் சான்றுப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது, அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையில் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக் கப்பட்ட அதேபொருளினை கொண்டிருத்தல் வேண்டும்.

பாகம் IV

## பொதுவான ஏற்பாடுகள்

வருடாந்த அறிக்கை

**18.** (1) நிறுவகமானது, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலிருந்து ஆறுமாதங்களினுள் நிறுவகத்தினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்கள் அத்தகைய அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்:-

(அ) ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட நிதியாண்டுக்கான நிறுவகத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்று;

(ஆ) நிறுவகத்தினால் செய்து கொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் பற்றிய அறிக்கையொன்று; அத்துடன்

(இ) அத்தகைய அறிக்கையும் கணக்குகளும் எந்த ஆண்டு தொடர்பானவையோ அந்த ஆண்டை உடனடுத்துவரும் ஆண்டுக்காக

உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்று.

(2) நிறுவகத்தினால் நிதியாண்டின்போது பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பான தனிவேறான கணக்குக்கூற்றொன்று (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(3) அமைச்சர், வருடாந்த அறிக்கை பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள், அத்தகைய அறிக்கையானது (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளிற் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து, ஆகக்குறைந்தது இலங்கையில் புழக்கத்திலுள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்தச் செய்தித்தாள்கள் மூன்றில் வெளியிடப்படுவதனையும், பாராளுமன்றத்தினால் கவனத்துட்கொள்ளப்படுவதற்காக அதன்முன்னர் இடப்படுவதனையும் செய்வித்தல் வேண்டும்.

இரகசியம் பற்றிய வெளிப்படுத்துகை

**19.** பேரவை உறுப்பினர்களும் நிறுவகத்தின் அலுவலர்களும் ஊழியர்களும் அவர்களது கடமைகளை ஏற்பதற்கு முன்னர் நிறுவகத்தின் பணிகள் சார்ந்த எல்லா கருமங்கள் தொடர்பிலும் கண்டிப்பாக இரகசியத்தை அனுசரிப்பதற்கு தம்மைப் பிணித்து வெளிப்படுத்துகையொன்றிற்கு கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், தாம் அத்தகைய வெளிப்படுத்துகையின்மூலம் -

(அ) ஒரு சட்ட நீதிமன்றத்தினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படுமிடத்து; அல்லது

(ஆ) 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்காக,

தவிர அவரது பணிகளைப் புரிகையில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய ஏதேனும் விடயத்தை வெளியிடாதிருப்பதற்கு அத்தகைய வெளிப் படுத்துகையின் மூலம் தம்மைப் பிணித்தலும் வேண்டும்.

நிறுவகத்தின் தத்துவங்களைக் கையளித்தல்

**20.** பேரவையானது, பேரவைக்குரித்தாக்கப்பட்ட அல்லது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தின், கடமையின் அல்லது பணியின் பிரயோகத்தை, புரிகையை அல்லது நிறைவேற்றுகையை நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது எவரேனும் அலுவலருக்கு

அல்லது ஊழியருக்கு, அத்தகைய அலுவலரின் அல்லது ஊழியரின் சம்மதத்துடன், எழுத்தில் கையளிக்கலாம். பேரவையானது, அத்தகைய ஏதேனும் கையளிப்பு எவ்வாறாயினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைதானே பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

நிறுவகமானது ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்

**21.** நிறுவகமானது, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப் படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

செலவுளை மீளளித்தல்

**22.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் நிறுவகத்தினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிறுவகத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிறுவகத்துக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் நிறுவகத்தின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது நிறுவகத்தின் பணிப்பின்மீது எவரேனுமாளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்படுகின்தென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவு அத்தகைய ஆளினால் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அறவிடப்பட்டாலொழிய, நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுக்காற்றுக் குழுவினாலான விசாரணைகள்

**23.** (1) இச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் குழு, நிறுவகத்தின் உறுப்பினரொருவரினது உயர்தொழில்சார் துர்நடத்தை தொடர்பிலான ஏதேனும் கருமத்தைப் பேரவை ஒழுக்காற்றுக் குழுவுக்கு ஆற்றுப் படுத்தும்போதெல்லாம் விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "உயர்தொழில்சார் துர்நடத்தை" என்பது, 26 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட பேரவையின் விதிகளினால் தீர்மானிக்கப்படவேண்டிய ஒரு செயல் அல்லது செய்யாமை என்று பொருளாகும்.

(3) ஒழுக்காற்றுக் குழு, (1) ஆம் உட்பிரிவின்கீழான விசாரணையொன்றை நடாத்திய பின்னர், அத்தகைய உறுப்பினர் உயர்தொழில்சார் துர்நடத்தைக்குக் குற்றவாளி யாகக் காணப்பட்டுள்ளாரா அல்லராவென்பதைக் குறித் துரைத்து, விசாரணையில் வெளிப்படுத்தப்பட்ட நிகழ்வு களினது அடிப்படையில் பேரவைக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

உயர்தொழில்சார் துர்நடத்தைக்காக நிரலிலிருந்து அகற்றுதல்

**24.** நிறுவகத்தின் எவரேனும் உறுப்பினர் உயர்தொழில் சார் துர்நடத்தைக்குக் குற்றவாளியாக இருந்துள்ளாரென 23 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஒழுக்காற்றுக் குழுவின் அறிக்கை நிலைநாட்டினால், பேரவையானது அத்தகைய உறுப்பினரை நிரலிலிருந்து அகற்றலாம்:

ஆயின், எவ்வாறாயினும், பேரவையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் உறுப்பினரொருவரை நிரலிலிருந்து அகற்றுவதற்குப் பதிலாக அவருக்கு எச்சரிக்கை விடுக்கலாம், அவரைக் கண்டிக்கலாம் அல்லது ஓராண்டை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்கு அவரை உறுப்பாண்மையிலிருந்து இடைநிறுத்தலாம்:

ஆயின், மேலும், அத்தகைய ஆள் நிறுவகத்தின் உறுப்பின ரொருவராக வருவதற்கும் ஊடக உயர்தொழிலரொருவராகச் செயலாற்றுவதற்கும் தகுதியுடையவராகவுள்ளாரெனப் பேரவை அபிப்பிராயப்படின், பேரவை அதன் தற்றுணிபில் அத்தகைய ஆளை மீண்டும் நிரலிற்சேர்க்கலாம்.

ஒழுங்குவிதிகள்

**25.** (1) கருமம் தொடர்பில் 7 ஆம் பிரிவின் நியதி களின் படியான பேரவையின் கூட்டமொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட பேரவையின் ஒருப்பாட்டுடன் அமைச் சரானவர், இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது எக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் தேவைப்படுத்தப்பட்டுள்ளனவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளனவோ அவ்வெல்லாக் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன்பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீ கரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதியொன்று எத்தேதியன்று இல்லாதொழிக் கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**26.** (1) நிறுவகத்தின் ஏதேனும் பொதுக் கூட்டமொன்றில் சமூமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மையொன்றினால், பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை, காலத்துக்குக்காலம் ஆக்குதல் பேரவைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:- விதிகள்

(அ) பேரவையுறுப்பினர்களின் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமனம் மற்றும் அத்தகைய உறுப்பினர்களின் தத்துவங்களும், கடமைகளும் மற்றும் பணிகளும்;

(ஆ) பேரவையின் கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்த பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை, அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும்;

(இ) உறுப்பினர்களை நிரலிற்சேர்த்தலும் நிரலி லிருந்து அகற்றுதலும், நிறுவகத்தின் உறுப் பாண்மைக்கான தகைமைகளும் தகைமை யீனங்களும், உறுப்பாண்மையின் வகுப்பாக்கம்,

உறுப்பாண்மைக் கட்டணங்கள் மற்றும் அது தொடர்பான ஏதேனும் கருமம்;

(ஈ) மாணவர்களை நிறுவகத்துக்குச் சேர்த்துக் கொள்ளுதல்;

(உ) கற்கைநெறிகளுக்காகவும் பரீட்சைகளுக்காகவும் விதிப்பனவு செய்யப்படவேண்டிய கட்டணங்கள்;

(ஊ) நிறுவகத்தின் கற்கைநெறிகள், செயல்முறைப் பயிற்சிநெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான ஏதேனும் கருமம்;

(எ) இச்சட்டத்தின்கீழ் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்களின் படிவங்களும் முறையும்;

(ஏ) நிறுவகத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும்; அத்துடன்

(ஐ) விதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்களும் அல்லது ஏதேனும் கருமம்.

(2) பேரவையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப்போன்று அதேபோன்ற கூட்டமொன்றிலும் அதேபோன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள், அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதன்மேல் மூன்று மாதங்களினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் தேதியிலிருந்து பயனுக்கு வருதலும் வேண்டும்.

(4) பேரவையினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன்பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் விதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட

எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அத்தகை ஏதேனும் விதி (4) ஆம் உட்பிரிவின் கீழ் இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**27.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய – பொருள் கோடல்

"ஊடக உயர்தொழிலர்கள்" என்பது, ஊடகத் துறையிலான எழுத்தாளர்கள், உள்ளீட்டு அபிவிருத்தியாளர்கள், உள்ளீட்டுப் பதிப்பாசிரியர்கள், தொகுத்து வழங்கு நர்கள் முன்வைப்போர், ஒலிபரப்பு வோர், ஊடகவியலாளர்கள், பதிப்பா சிரியர்கள், வெளியீட்டாளர்கள், ஊடகச் சொந்தக்காரர்கள், ஊடக முகாமை யாளர்கள், ஊடக அறிவு புகட்டுவோர், ஊடக ஆராய்ச்சியாளர்கள், ஊடகத் தொழினுட்பவியலர்கள் மற்றும் புகைப் படம்பிடிப்போர் என்பவர்களை உள்ளடக்கும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் அல்லது 45 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஊடகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

"எழுத்திலான சட்டம்" என்பது, அரசியலமைப்பில் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக் கப்பட்ட அதே பொருளினைக் கொண்டிருத் தல் வேண்டும்.

**28.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.